DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 563/2025

Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW1 (LW1)
Defence

Name : Anitha

Father Name / Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 12th May 2026.

1ம் எதிரிக்கு மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

முதண்மை விசாரணை

நான் தற்போது ஒலக்கூர் காவல் நிலையத்தில் தமைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.11..2025 அன்று நான் கோட்டக்குப்பம மதுவிலக்கு அமல்பிரிவு தலைமை காவலராக பணியிலிருந்தேன். அப்போது ஆய்வாளர் மீனா தலைமையில் நானும் த.கா. நீலமேகன் ஆகியோருடன்

கோட்டக்குப்பம் சோதனை சாவடி எதிரே வாகன சோதனை செய்துகொண்டிருந்தபோது பாண்டி டூ சென்னை மார்க்கமாக டிஎன்.01 ஏஎன் 0947 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை நிறுத்தி சோதனை செய்தபோது மேற்படி பேருந்தில் சந்தேகத்திற்கு இடமாக இருந்த அதில் பாண்டிச்சேரி மதுபானங்களான Blue Grape Brandy 750ml- 35NO, Courier Nepolean Brandy 750ml- 22NOs, Old Monk Rum 750ml- 6NO, Mansion House Brandy 750ml- 3Nos, Imperial Blue Whisky 750ml- 4NOs, வமேற்படி அரசு பேருந்தின் ஓட்டுநரை விசாரிக்க அவர் எங்கள் முன்னிலையில் தாமாக முன்வந்து எவ்வித அச்சுறுத்தலோ துன்புறுத்தலோ ஆசை வார்த்தையின்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்தார். அதில் நானும் த.கா. நீலமேகன் சாட்சி கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் என் கையொப்பம் 1வதாக உள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தில் 1வதாக உள்ள கையொப்பம் **அ.சா.ஆ-1** ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆய்வாளர் மேற்படி பேருந்தில் பயணம் செய்த சதீஷ், வீரப்பன் ஆகியோர்களை காரணம் கூறி சம்பவ இடத்தில் கைது செய்தார். மேற்படி பாட்டில்களை எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரில் என் கையொப்பம் 1வதாக உள்ளது. சாட்சி நீலமேகன் கையொப்பம் 2வதாக உள்ளது. மேற்படி கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.2** ஆகும். மேற்படி கைப்பற்றப்பட்ட Blue Grape Brandy 750ml- 35NO, Courier Nepolean Brandy 750ml- 22NOs, Old Monk Rum 750ml- 6NO, Mansion House Brandy 750ml- 3Nos, Imperial Blue Whisky 750ml- 4NOs, பாட்டில்களின் புகைப்படங்கள் **அசா.ஆ.3 ஆகும்.** பின்பு ஆய்வாளர் எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.143/2025 பிரிவுகள் 4(1)(aa) 4(1)(B) TNP Amendment ACt எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆய்வாளர் விசாரணையில் எத்தனை மணிக்கு செய்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் பேருந்தில் யார் யாரை விசாரித்தோம என்று பெயர்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

ஆய்வாளர் விசாரணையில் நான் வாகன தணிக்கையில் ஈடுபட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை மணிநேரம் பெறப்பட்டதாக ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எங்கு பெறப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

ஒப்புதல் வாக்குமூலத்தில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் கையொப்பம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்கமூலம் காவல் நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் அந்நிய சாட்சிகள் யாரும் கையொப்பம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் எந்த இடத்தில் தயார் செய்யப்பட்டது என்று ஆய்வாளர் விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

படிவம் 91ல் சாட்சிகளின் கையொப்பத்தில் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எந்த வாகன தணிக்கையும் செய்யப்படவில்லை என்றாலும் உயர் அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க புள்ளி விவர கணக்கிற்காக எனது ஆய்வாளர் தாக்கல் செய்த தவறான வழக்கிற்கு தற்போது தவறாக சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/-XXXX,

நீதித்துறை நடுவர்,

வானூர்.